**தலைப்பு 194 – தொலைத்தொடர்பு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொலைத்தொடர்பு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 11 ஆந் பிரதான திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/19 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவுத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக்கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,513,388,244 ஆக இருந்ததுடன் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் ரூபா 2,334,438,176 ஆக இருந்தமையால் ரூபா 821,049,932 தொகையான நிதியல்லாத சொத்துக்கள் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கு கவனம் செலுத்த வேண்டும். | முடிவடையாத வேலைகளின் பெறுமதி கணக்கீடு செய்யும் போது அகற்றப்பட்டதால் நிதியல்லாத சொத்துக்கள் குறைத்து கணக்கீடு செய்யப்படவில்லை. |

### 1.6.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு<br>இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| நிதிப்பிரமாணம் 104(4) மற்றும் PFD/RED/2015/08 பொது(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (i) அமைச்சிற்குச் சொந்தமான வாகனத்திற்கு 2017 ஆம் ஆண்டின் போது விபத்திற்குட்பட்ட காரணத்தினனால் ரூபா 2,969,905 ஆன மதிப்பீட்டு நட்டமொன்று இடம்பெற்றிருந்த போதும் அது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் 2 ½ தாமதமாகியிருந்தது. மேலும் இந்நட்டம் தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்கள், இனங்காணலுக்காக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தப்படவில்லை அவ்வாறே திருத்தங்களுக்காக ரூபா 744,700 செலவிடப்பட்ட தாகவும் அத்தொகையை காப்புறுதியால் மேவுகை செய்யப்பட்டதாக காரணம் குறிப்பிடப்பட்டு எதிர்வரும் பரிசோதனை இடை நிறுத்தப்பட்டிருந்தது. | இவ்விபத்து காரணமாக அரசின் சொத்துக்களுக்கு இடம்பெற்றுள்ள நட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வாகனத்தை எடுத்துச் சென்ற உத்தியோகத்தரால் விபத்து இடம்பெற்றதன் பின்னர் வாகனத்தை பன்னிப்பிட்டியவில் உள்ள தனியார் கராஜ் ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்டு போடப்பட்டிருந்தது. அதன் திருத்தம் தொடர்பாக பரிசோதனை குழுவொன்று நியமனம் செய்யப்பட்டதுடன் அக்கழுவின் பரிந்துரையானது மேற்குறித்த தனியார் கராஜில் காப்புறுதி மேவுகை செய்யப்படும் தொகைக்கு உட்பட்டு திருத்தங்களைச் செய்யுமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திருத்த வேலைகள் அந்த கராஜினால் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 744,700 தொகையான முழுத்தொகையும் காப்புறுதி நிறுவனத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) | மீளாய்வாண்டின் போது இரண்டு வாகனங்களுக்கு இடம்பெற்றிருந்த விபத்து காரணமாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்குரிய ரூபா 151,250 கூட்டுத்தொகை யான நட்டம் காப்புறுதியால் மேவுகை செய்யப்பட்டதாக காரணங்கள் சமர்ப்பித்து நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அரசின் சொத்துக்களுக்கு நட்டமொன்றோ அல்லது சேதமொன்றோ இடம்பெற்றவுடன் அதன் அளவு மற்றும் காரணங்கள் மற்றும் அதற்கு பொறுப்பானவர்களை தீர்மானிப்பதற்காக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஆ) 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 3/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 9(iii)ஆம் பந்தி | | தமது சேவைக்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற முறைகேடுகள் தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் தாபன விதிக்கோவையின் ii தொகுதியின் 24:3:10 மற்றும் 24:3:11 ஆம் பந்தியின் பிரகாரம் கடுழிய தண்டனை பெற்றிருந்த ஒய்வு பெற்றிருந்த உத்தியோகத்தரொருவர் முறையற்ற விதத்தில் வெளிநாட்டு தொழில் பிரிவின் உள்ளக கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டிருந்தார். அதற்குரிய விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் அனுமதிக்கப்பட்ட மாதிரிப்படிவத்தில் குறித்த இடத்தில் குறித்த உத்தியோகத்தரின் ஓய்வுபெறுவதற்கு முன்னர் சேவைக்காலம் திருப்திகரமானதெனவும் ஒழுக்காற்று தண்டணை பெற்றுக்கொள்ளப்பட வில்லையென என்ற விடயம் உள்ளடக்கப்பட்டிருந்தது. | முறையான நடைமுறையொன்றின் பேரில் தகைமையுடைய உத்தியோகத்தரொருவர் அமைச்சின் உள்ளக கணக்காய்வு பதவிக்காக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வாறான ஆட்சேர்ப்பொன்றை மேற்கொள்ளும் போது கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த மூலதன நிதி ஏற்பாட்டில் ரூபா 1,340,802,523 அதாவது 58 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | செயலாற்றலை நிறைவேற்றும் வகையில் காலப்பகுதி திட்டவட்டமாக தீர்மானிக்கப்பட்டு ஆண்டின் போது நிறைவேற்றப்படக்கூடிய செயற்பாடுகளின் அளவிற்கு ஈடாகும் வகையில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். | இயலுமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நியாயமான எதிர்வுகூறலைப் பின்பற்றி பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 18 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ரூபா 237,039,750 ஆன மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 63 செலவின விடயங்களுக்காக மிகை நிதி மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் அச்செலவின விடயங்களில் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாடுகளின் 10 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | பட்டியல் சமர்ப்பிக்கப்படாமை, கட்டுநிதி கிடைக்காமை போன்ற காரணங்களால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டன. |

## 2.2 வைப்புக்கள் மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 10,849,275 தொகை மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 6,365,092 ஆன வைப்புக்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். பொது வைப்புக்களை விடுவிப்பது தொடர்பில் மீளச் செலுத்துவதற்கோ நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டதாக குறிப்பிடுகின்றேன். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 771,525 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதி ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. |
| (ஆ) மீளாய்வாண்டில் வாடகைக்கு பெற்றுக்கொண்ட அலுவலக கட்டிடங்களை மேம்படுத்து வதற்கு உரிய தனியார் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 513,450 ஆன உறுதிப்படுத்தப்பட்ட பட்டியல்களின் பெறுமதி பொறுப்புக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வழங்கக்கூடிய சேவையொன்றுக்காக செலுத்த வேண்டியதாக காணப்பட்ட பொறுப்புக்களை கணக்கீடு செய்ய வேண்டும். | அலுவலக உபகரணங்கள் திருத்த செலவின விடயத்தில் 25 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டதன் பின்னர் போதியளவு நிதிஏற்பாடு மேற்கொள்ளாமையால் இத்தொகை பொறுப்புக்களாக காண்பிக்கப்படவில்லை. |

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் அமைச்சின் பதிவேடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு வழங்கிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை மற்றும் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 96,404,732 ஆக இருந்ததுடன் அது திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 96,580,230 ஆக இருந்தமையால் அமைச்சு மற்றும் திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 175,498 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வேறுபாடுகளை இனங்கண்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த ரூபா 116,015 தொகையான கடன் மீதி 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | ஓய்வுபெறல், அல்லது சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தரிடமிருந்து கடன் மீதிகள் அறவிடுவது தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டாய ஓய்வூதியத்திற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவரின் ரூபா 116,015 ஆன கடன் மீதி மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரியின் கீழ் புலம் பெயர்வோரின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துதல், புலம்பெயர் குடும்பங்கள் இந்நாட்டிற்கு வந்ததன் பின்னர் புலம் பெயர்ந்தோரின் முன்னேற்றத்தை வருடாந்த செயல் திட்டத்தில் நோக்க மொன்றாக இனங்காணப்பட்டிருந்த போதும் அதன் கீழ் பௌதீக இலக்கு மற்றும் நிதிசார் இலக்கு குறிப்பிடப் பட்டிருக்கவில்லை. | புலம்பெயர்வோர் தொடர்பாக தேசிய கொள்கைகளில் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்காக நேரடியாக தொடர்புடைய இந்நிகழ்ச்சித்திட்டங்கள் அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டு செயற் படுத்த வேண்டும் | அமைச்சின் 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காக தொழிலாளர் கேள்வியின் தன்மையை விளங்கிக் கொள்ளுதல் மற்றும் உழைப்புத் தேவையுள்ள புதிய பிரிவுகளை இனங் காண்பதற்காக வெளிநாடுகளில் உழைப்புச் சந்தையை ஆய்வு செய்வதற்கு பொறிமுறைமையொன்றை திட்டமிட்டு செயற்படுத்துவது அமைச்சின் விடயப் பரப்பிற்கு உள்ளடக்கப்பட்ட செயற்பாடாக இருந்த போதும் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அச்செயற்பாடு உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்தல் அதில் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற் படுத்தல் முறையான கவனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும் | அமைச்சின் 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

## 3.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அமைச்சினால் தனது கடமைகளை நிறைவேற்றும் போது கவனம் செலுத்த வேண்டிய 05 முன்னுரிமை துறைகளின் கீழ் 10 நோக்கங்களை இலக்காக கொண்ட 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட் செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) அமைச்சினால் வெளிநாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 9 ஒன்றிணைந்த கூட்டங்களில் 2 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொடர்பாக ஏற்படுத்திக் கொண்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கைகளை செயற்படு நிலைமைக்கு கொண்டு வருவதற்காக குறித்த தரப்பினருடன் எப்போதும் தொடர்பு வைத்துக்கொள்ளப்படல் மற்றும் சிக்கல்கள் பற்றிய கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் 07 சந்தர்ப்பங்களில் அதற்கான விண்ணப்பங்கள் வெளிநாட்டு அமைச்சிற்கு தொடர்புபட்டுள்ளது எவ்வாறாயினும் திட்டமிடப்பட்டதன் பிகாரம் ஒன்றிணைந்த கூட்டங்களை நடாத்த முடியாதிருந்தன. |
| (ஆ) வெளிநாடுகளுடன், ஏற்படுத்திக் கொண்ட 04 உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந் போதும் யப்பானுடன் ஒரு உடன்படிக்கையொன்று மாத்திரம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. | வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறை மூலம் ஆகக்கூடிய பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்காக நாடுகளுடன் இராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடல் மேற்கொண்டு உடன்படிக்கைகள் மேற்கொள்வது அத்தியவசியமாக இருப்பதால் அதற்காக அமைச்சு செயற்திறனாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | இணங்குகின்றேன். |
| (இ) தொழிலாளர் இடம்பெயர்வு தொடர்பாக 06 தேசிய மதியுரை குழு கூட்டங்களை (national advisory committee meetings) நடாத்த திட்டமிடப்பட்டிருந்த போதும் | தொழிலாளர் இடம் பெயர்வு தொடர்பாக தேசிய கொள்கையை அமுலாக்குவதற்கு இக்கழுவின் செயற்பாடு அவசியமாக இருப்பதால் | 02 தேசிய மதியுரை குழு கூட்டங்களை நடாத்த திட்டமிடப்பட்டிருந்த போதும் நாட்டில் காணப்பட்ட ஸ்தரமற்ற |

| | | |
|---|---|---|
| அதில் 03 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | குறித்துரைத்த பிரகாரம் கூட்டங்களை நடாத்துவதற்கு கவனம் செலுத்த வேண்டும். | நிலை மற்றும் அமைச்சு வேறிடத்திற்கு கொண்டு செல்லப்பட்டமையால் ஒரு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. |

**3.3 எதிர்பார்த்த விளைவு மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் ரூபா 1,000,000 நிதிஏற்பாட்டின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட நோவுட் சன்ரைஸ் விளையாட்டரங்கினை அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய விளையாட்டரங்கில் 62.55 மீற்றர் உள்ளவாறு 4 மீற்றர் உயரத்தில் மேவுகை ஒன்று அமைத்ததாக ரூபா 953,888 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் ஈடுபட்டிருந்த வலை மேவுகைகளீல் உயரம் மீற்றர் 3.2 ஆக இருந்தமையால் ரூபா 190,778 தொகை மிகை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு ரூபா 66,772 மாத்திரம் ஒப்பந்தக்காரரிடமிருந்து மீண்டும் அறவிடப்பட்டிருந்தது. கம்பி வலையின் மேற்பகுதி கீழ்ப்பகுதி எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் பூர்த்தி செய்யப்படாமையால் உரிய விலையின் பிரகாரம் கொடுப்பனவு செய்தமை தவறாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | உரிய காலப்பகுதியில் செயற்திட்டத்தை நிறைவேற்றக்கூடிய வகையில் செயற்திட்டங்களை நிறைவேற்றக்கூடிய வகையிலும் தேவைப்பாட்டை இனங்கண்டு திட்டம் முறையாக தயாரிக்கப்பட்டு காலப்பகுதிக்குள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கல்களை தீர்வு செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடைமுறைகள் தொடர்பான அறிக்கையொன்று சமர்ப்பிக்குமாறு நுவரெலியா மாவட்ட செயலாளருக்கு 2020 திசெம்பர் 03 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. |

**3.4 எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உடுபத்தாவ பிரதேச செயலாளர் அலுவலகப் பிரிவுக்கு உட்பட்ட துங்கொட்ட பாலத்திற்கு அருகில் நடைபாதையொன்றை நிர்மாணிக்கும் திட்டமொன்று தொடர்பில் ஒப்பந்தம் செய்யப்பட்ட தொகை ரூபா.7,460,000 | குறிப்பிட்ட கால எல்லைக்குள் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான வகையிலும் மற்றும் தேவைகளின் அடிப்படையில் திட்டம் ஒழுங்கு முறையாக | இந்த விடயங்கள் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை வழங்குதற்காக ஏனைய பிரிவுகளில் இருந்து தகவல்கள் |

| | | |
|---|---|---|
| ஆக இருந்ததுடன் ஓடுபாதைக்காக மதிப்பீடு செய்யப்பட்ட முழுத்தொகை ரூபா 9,436,900 ஆக இருந்தமையால் ஒப்பந்த தொகையை விட மேலதிகமாக ரூபா 1,976,900 செலுத்தப்பட்டிருந்தது. நடைபாதை நிர்மாணிக்கப்படருந்த பிரதேசம் மாரிகாலத்தில் முற்றிலுமாக நீரில் மூழ்குவதாகவும் நடைபாதையை அண்மித்து நிர்மாணிக்கப்பட்டிருந்த வாகனத் தரிப்பிடம் முற்றிலுமாக நீரில் அடித்துச் செல்லப்பட்டிருந்துடன் நடைபாயையில் அமைந்திருந்த 20 மருத மரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததனால் இந்த நடைபாதையானது நடப்பதற்கு பாவிக்க முடியாத நிலையில் இருந்தது.<br>நடைபாதைக்கு மண் நிறைத்து மட்டப்படுத்துவதற்கு ரூபா 900 வீதம் 3500 கனமீட்டரிற்கு ரூபா 3,150,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், செய்யப்பட்ட வேலை அறிக்கையின் படி 6320 கன மீட்டரிற்கு ரூபா 900 வீதம் ரூபா 5,688,000 செலவிடப்பட்டிருந்த காரணத்தினால் மதிப்பிடப்பட்ட தொகையை விடவும் மேலதிக ரூபா 2,538,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தயாரிக்கப்பட்டு குறித்த கால எல்லைக்குள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் ஒப்பந்த முகாமை மேற்பார்வை மற்றும் ஒழுங்கு படுத்தல்கள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். | பெற்றுக் கொள்ளப்பட வேண்டியுள்ளதால் பதில் வழங்குவதற்காக இரண்டு வார. கால அவகாசம் கேட்கப்பட்டிருந்தது. |

## 3.5 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தியகம மஹிந்த ராஜபக்ஷ தேசிய விளையாட்டு அகடமியில் 400 மீட்டர் ஓடுபாதை மற்றும் மலசலகூடத் தொகுதியும் நுழைவாயில் வழியையும் நிர்மாணிக்கும் 2 செயற்திட்டங்கள் தொடர்பில் முறையே ரூபா 310 மில்லியன், மற்றும் 15.16 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் அந்த செயற்திட்டம் தொடர்பில் முறையே ரூபா 183.85 மில்லியன் மற்றும் 10.3 மில்லியன் | குறிப்பிட்ட கால எல்லைக்குள் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியுமான வகையில் தேவையை அறிந்து கொண்டு திட்டத்தினை ஒழுங்கு முறையில் தயார் செய்து கால எல்லைக்குள் நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபாவும் செலவிடப்பட்டிருந்தது. இந்த இரண்டு செயற்திட்டத்தினதும் நிர்மாண வேலைகள் முறையே 2018 திசெம்பர் 30 ஆம் திகதி மற்றும் 2018 ஏப்ரல் 29 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தாலும் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரைக்கும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | குருநாகல் மலியதேவ கல்லூரியில் சுடுதல் மற்றும் ஈட்டியெறிதல் மத்திய நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கான திட்டம் தொடர்பில் ரூபா 12.23 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் 2019 ஆம் ஆண்டின் ரூபா 7.43 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2018 நவெம்பர் 3 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய இந்த திட்டம் 2019 மே 23 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் வரைக்கும் வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | - மேற்படி - | அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.6 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கையின் குடியேற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப பாதுகாப்பு மற்றும் நலன்கள் மீது உதவும் நோக்கில் சுவிட்சலாந்து அரசின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஊழியர் குடிவரவு வேலைதிட்டத்தை (SDC Project) மேற்பார்வை செய்தல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அங்கு நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் கட்டுப்பாடொன்று இன்றி இடம் பெற்றிருப்பது பின்வரும் காரணங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | | |

| | | | |
|---|---|---|---|
| (அ) | வேலைத்திட்டதின் முதற்கட்டம் அமெரிக்க டொலர் 699,414 நிதிப் பங்களிப்புடன் அடிப்படையில் 2010 திசெம்பர் முதல் 2013 மார்ச் வரை நடைமுறைப்படுத்தப்பட்டதாக அவதானிக்கப்பட்ட போதிலும் அதன் செயற்பாடு தொடர்பில் அமைச்சரவையின் அனுமதியோ புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றோ அல்லது மேலும் தெளிவான தகவல்களோ கணக்காய்விற்கு முன்வைக்கப்படாமை. | காணப்படும் நிதி நிருவாக சட்டதிட்டங்களுக்கு அமைய மற்றும் இலங்கையில் குடியேற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களுக்காக நாட்டுக்கு கிடைக்கும் நிதி துஷ்பிரயோகமின்றி குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கான அவசியமான வழிகாட்டல்களை மற்றும் மேற்பார்வையை அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டும். | திட்டத்தின் பௌதீக செயற்பாடுகள் தொடர்பாக மேற்பார்வை மற்றும் பின்தொடர்தல் நடைபெற்றதுடன் அங்கு நிதி நடவடிக்கைகள் தொடர்பாக தலையீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சுவிட்சர்லாந்து அரசுடன் இலங்கை அரசு 2014 ஜுலை 25 ஆந் திகதி செய்து கொண்ட இருபக்க ஒப்பந்தத்திற்கு அமைவாக அமெரிக்க டொலர் 3,875,000 நிதிப் பங்களிப்புடன் நிகழ்ச்சி நிரலின் இரண்டாவது கட்டம் 2013 ஆம் ஆண்டு மார்ச் தொடக்கம் 2016 பெப்ரவரி வரை நடைமுறைப்பட்டிருந்தது. 2014 ஜுன் 06 ஆந் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைய வெளிநாட்டு வளத் திணைக்களத்தினூடாக நிதி உதவிகள் பெற்றுக் கொள்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தும் அந்த நியதிகளை இந்த ஒப்பந்தத்திற்கு உட்படுத்தி அதனடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | வெளிநாட்டு வன திணைக்களத்தின் மேற்பார்வையோ கட்டுப்பாடொன்றோ இன்றி இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூன்றாம் கட்டம் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் 2020 ஆம் ஆண்டு | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பெப்ரவரி வரை நடைமுறைப் படுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக ரூபா 503,539,342 தொகை இலங்கைக்கு கிடைக்கப் பெற்றிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டம் இணக்கப்பாட்டு கடிதமொன்று மூலம் உடன்பா டொன்றினூடாக நடைமுறைப் படுத்தப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் அரசின் உடன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கோ புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | இலங்கை அரசு சார்பாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமைச்சின் ஊடாக மேற்பார்வை செய்யப்பட வேண்டியிருந்தும் 2016 மார்ச் தொடக்கம் 2020 பெப்ரவரி வரையான காலத்தினுள் இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் ரூபா 503,539,342 ஆன நிதியை பயன்படுத்துவது தொடர்பான தகவல்கள் அமைச்சிடம் இருக்கவில்லை. வெளிநாட்டு வளத் திணைக்களத்தினூடாக நிதி கிடைக்காமையினால் அரசாங்க உத்தியோகபூர்வ மாற்றமாக இத்தொகை கருதப்படாததுடன் 2020 பெப்ரவரி மாதத்தில் செயற்திட்டத்தின் காலம் நிறைவடைவதற்கு இருந்த போதிலும், குறைந்தது இணக்கப்பாட்டு கடிதமொன்றோ இல்லாமல் 2020 ஆகஸ்ட் 11 ஆம் திகதி வரை இந்த நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டு வந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

3.7 **சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சிற்குரிய டொயோட்டா ஜீப் வண்டியொன்று விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | நிறுவனங்களுக்கு கையளிக்கும் போது அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் தடையொன்று ஏற்படாமல் இருப்பதற்கும் அச்சொத்துக்களை முறைப்படி கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஜீப் வண்டியை அமைச்சிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2018.12.18 ஆந் திகதி விளையாட்டுக்கள் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | வெளிநாட்டு தொழில் பிரிவின் முன்னால் பிரதி அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த செல்லிட தொலைபேசி மற்றும் மடிக் கணனியொன்று அமைச்சின் அலுவலகத்திலிருந்து வெளியேறி ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த மீளப் பொறுப்பேற்தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அச்சொத்துக்கள் அமைச்சின் பயன்பாட்டிற்காக மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | பிரதி அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அப்பல் ஐ 7 செல்லிட தொலைபேசி மற்றும் HPi5 மடிக் கணனியொன்றும் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | முன்னால் அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த மடிக் கணனியொன்று அமைச்சின் இடமாற்றம் பெற்றுச் செல்லும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - | கணனி புதிய அமைச்சிற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் வினியோக கட்டளை வழங்கிய போதும் அந்த அமைச்சின் களஞ்சிய புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டமைக்கான பெறுவனவு விபரங்கள் அமைச்சிற்கு கிடைத்திருக்கவில்லை. |
| (ஈ) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான மோட்டார் வண்டியொன்று விளையாட்டு அமைச்சினால் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் பயன்படுத்தப்பட்டிருந்தது. | அச்சொத்துக்களை முறைப்படி கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடமைத் தேவைப்பாட்டிறகாக இவ்வாகனங்கள் பரிமாற்றப்பட்டுள்ளதுடன் முறையாக கையளிப்பதற்கும் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**3.8 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 1,700,000 ஆன மாதாந்த வாடகை அடிப்படையில் அவசர தேவையாக கருதி அமைச்சின் வெளிநாட்டு சேவை வாய்ப்புப் பிரிவின் அலுவலகத்தை புதிய கட்டிடமொன்றிற்கு மாற்றப்பட்டிருந்த துடன் இதற்காக ரூபா 11,417,505 இற்கு மேலதிக செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச் செயற்பாடு தொடர்பாக போதியளவு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை என்று இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் ரூபா 22 மில்லியன் கடன் பணத்தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட கட்டிடத்தில் மூன்று மின்சார தொலைபேசி மற்றும் நீர் விநியோக வசதிகள் இருப்பதாக வழங்குனரால் விலை அளவுகள் முன்வைக்கப்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அந்த வசதிகள் இல்லை என தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கையின்படி அவதானிக்கப்பட்டது. ஏலம் மதிப்பீட்டின் போது அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.<br>கேட்கப்பட்டிருந்த விதந்துரைகள் இணங்காமையை ஒரு மாதத்தினுள் பூர்த்தி செய்து தருவதாக சான்றிதழொன்று பெற்றுக் கொண்டு ஒரு சதுர அடிக்கு ரூபா. 139.15 இற்கு ஆக குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குனர்களின் கட்டிடத்தை வாடகைக்குப் பெறுவதற்கு அமைச்சின் கொள்வனவுச் சபை தீர்மானித்திருந்தது. எதிர்பார்க்கப்பட்ட விதந்துரைகளுக்கு மற்றும் ஒப்பீட்டளவில் குறிப்பிடத்தக்க அளவு விலகல்கள் அவதானிக்கப்படாத சதுர அடி ரூபா 140 ஆன இரண்டாம் குறைந்த விலைமனு சமர்ப்பித்த வழங்குனர் தெரிவுக்கு காரணங்கள் | அந்த பெறுகையின் போது ஏற்பட்ட பிழை மற்றும் குறைபாடுகள் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய பிரிவினர் அடையாளம் காண்பிப்பதற்காக ஒழுங்கு முறையிலான சோதனைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் அது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் பெறுகை நடவடிக்கைகளுக்கு உரிய உள்ளக கட்டுப்பாடொன்று முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | முன்பிருந்த கட்டிடத்தில் ஊழியர்களுக்கு போதியளவு இடவசதிகள் காணப்படாமை, போதியளவு வசதிகள் இல்லாமை, வீதி நெருக்கடிகள் காரணமாக போக்குவரத்து சிரமங்கள் ஏற்படுதல் தொடர்பில் வேறு அரச கட்டிடமொன்று இருக்காமை, முன்பு இருந்த கட்டிடத்தின் வாடகை காலம் முடிவடைதல் போன்ற காரணங்களினால் புதிய கட்டிடத்திற்கு அமைச்சின் அலுவலகத்தை இடமாற்றம் செய்யவேண்டி ஏற்பட்டது. |

முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. தெரிவு செய்யப்பட்டிருந்த கட்டிடத்தில், அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட அறைகள் காணப்படுவதாக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கட்டிடம் வாடகைக்கு பெறப்பட்ட பின்பு அங்கு அறைகள் ஒதுக்குவது மற்றும் உள்ளக அழகுபடுத்தல் சேவைகள் தொடர்பில் ரூபா 11,072,504 தொகை செலவிடப்பட்டிருந்தது. அங்கும் கட்டிட உரிமையாளருடன் குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திட முன்பும் பௌதீக பரிசோதனையின் போர்து இனங் காணப்பட்ட குறைபாடுகள் பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்கு அமைச்சின் விளையாட்டு பிரிவினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | அமைச்சினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை தயார்படுத்தப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்துவதற்கு செயல் நடவடிக்கைத் திட்டத்திலிருந்து தேவையான நடவடிக்கை தற்போது இடப்பட்டுள்ளது. |
| (ஆ) | அமைச்சின் வெளிநாட்டு தொழில் பிரிவினால் தனது திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த செயற்பாடுகள் மற்றும் உப செயற்பாடுகள் என்பவற்றை நிறைவேற்றுவதனை எண்ணிக்கை ரீதிாக அளவிடுவதற்கு முடியுமான வகையில் சுட்டிக்காட்டிகள் மாத்திரம் நிறுவப்பட்டிருந்ததால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களில் | நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிறைவேற்ற வேண்டிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்காக காணப்படும் (Gap) உட்பட செயன் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக பொருத்தமான சுட்டி களை (Key Performance Indicators ) இனங்காணப்பட வேண்டிய போதும் | நிலைபேறான அபிவிருத்தி இலக்களை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுகளில் பெறுபேறுகள் மற்றம் தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக செயலாற்றல் சுட்டிகளை உள்ளடக்குவது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் திட்டங்கள் தயாரிக்கும் போது இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |

| | | | |
|---|---|---|---|
| | விளைவுகள் மாத்திரம் மதிப்பீடு செய்யக்கூடிய இயலுமை காணப்பட்ட போதும் விளைவுகள் மற்றும் நீண்டகால தாக்கங்கள் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் ஊடாக அளவிடும் இயலுமை காணப்படவில்லை. மேலும்நிறவேற்றப்பட வேண்டிய இலக்குகளின் பிரகாரம் காணப்படும் விலகல்களை இனங்காணுதல் மற்றும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நோக்கங்களை அடைந்து கொண்ட அளவு, அதிலிருந்து விலகியமை உட்பட கவனம் செலுத்த வேண்டிய உலகலாவிய குறிகாட்டிகளுக்கு அண்மித்தாக குறிகாட்டிகள் இலக்கிடப்பட வேண்டும். | |
| (இ) | சுவீடன் அரசின் உதவியுடன் குடியகழ்வு தொடர்பாக சர்வதேச அமைப்பு (International Organization for Migration) இன் தலையீட்டுடன் குடியேற்ற கட்டுப்பாட்டு குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருந்தும் அதனூடாக ஒவ்வொரு நாட்டிலும் குடியேற்றக் கட்டுப்பாட்டு மாதிரி மதிப்பீடு செய்தல், குடியேற்றம் தொடர்பில் நிலையான அபிவிருத்தி இலக்கொன்று நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வசதிகள் செய்து கொடுப்பதும் நோக்கமாக இருந்தது. 6 பிரதான விடயங்களின் கீழ் இந்த குறிகாட்டிகள் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் இந்த குடியேற்ற கட்டுப்பாட்டு குறிகாட்டிகள் ஊடாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட காரணிகளை | சகல நிறுவனங்களினதும் உள்நாட்டு முகாமையின் பங்குபற்றலுடன் செயலமர்வொன்று நடாத்தப்பட்டிருந்ததுடன் அதில் உட்படுத்தப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பாக முகாமையினால் கவனம் செலுத்தப்பட்டு துறையின் அபிவிருத்திக்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தினுள் இந்த குறிகாட்டிகளில் உள்ளடங்கியுள்ள காரணிகள் வேறுவேறாக காட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நாளதுவரையாக காணப்படும் அமைச்சின் தேசிய கொள்கையில் மேம்படுத்தப்பட வேண்டிய துறைகளுக்கு உரிய செயற்பாடுகள் உட்படுத்தப்பட்டிருக்கின்றன. |

நிறைவேற்றி கொள்ள முடியாமல் இருந்த மற்றும் மென்மேலும் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய பகுதிகள் / பிரிவுகள் தொடர்பாக எந்தவொரு செயற்பாடோ அல்லது உதவியோ அமைச்சின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பகுதியினால் நிலையான அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் போது உட்படுத்தப்பட் டிருக்கவில்லை

## 5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் வெளிநாட்டு தொழில் பிரிவின் உள்ளக கணக்காய்வாளர் பதவி 2018 மே 15 ஆந் திகதி முதல் 2019 நவம்பர் 30 ஆந் திகதி வரை வெற்றிடமாக காணப்பட்டதுடன் 03 பேருடனான பதவியணியொன்றினால் அதன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டில் 03 கணக்காய்வு ஐயவினாக்கள் மாத்திரம் விநியோகிக்கப் பட்டிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 30 முறைப்பாடுகளில் 2019 மே 10 ஆந் திகதி வரை 25 முறைப்பாடுகளின் புலனாய்வு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்காக உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்த போதும் அந்த உத்தியோகத்தர்கள் மூலம் கணக்காய்வு செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று எடுக்கப்படாதிருந்தமையால் அந்நிலைமயை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இப்பிரிவிற்காக போதியளவு பதவியணியினரொன்று இல்லாதிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை அடைய முடியாதிருந்தது. |

## 6 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரை சிரேஷ்ட மட்டத்தில் 06 வெற்றிடங்கள் உட்பட மொத்த வெற்றிடங்கள் 24 ஐ நிரப்புவதற்கு அமைச்சின் விளையாட்டு பிரிவு தவறியிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்தியவசிய சேவைகளை உடனடியாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சிரேஷ்ட மட்டத்தில் வெற்றிடங்களாக உள்ள பதவிகள் அனைத்தும் அனைத்தும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1068 ஆக இருந்த போதும் அதில் 999 பேர் சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்ததுடன் அதில் 949 பேர் அபிவிருத்தி உத்தியோகத்தர் களாக இருந்ததுடன் நிறைவேற்று மட்டத்தில் 11 பதவிகளில் 02 வெற்றிடங்கள் காணப்பட்டன. எனினும் இரண்டாம் மட்டத்தில் 63 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் 40 அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இருந்தனர். | அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றிக் போதியளவு பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் தற்போதய பதவியணியினர் முறையான முகாமையின் கீழ் நிர்வகிப்பதற்கு முகாமை கவனம் செலுத்த வேண்டும். | அமைச்சில் வெற்றிடங்கள் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |